வீடியோ கமரா,
T. V. வீடியோ டெக்
ஆகியவற்றை
உத்தரவாதத்துடன்
உடனுக்குடன்
திருத்திக் கொள்வதற்கு

எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

பக்கங்கள் நான்கு

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்.

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

[illegible]
நிகழும்
[illegible] நிகழ்வுகளின்
நவீன முறையில் வீடியோ
படப்பிடிப்பிற்கு

எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 17 புதன்கிழமை (30 - 03 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 123

ரஷ்யா, தென்னாபிரிக்காவிலிருந்து மேலும் ரூ.300கோடிக்கு ஆயுதங்கள்

ஸ்ரீலங்கா அதிகாரிகள் குழு இரு நாடுகளுக்கும் விரைகிறது

கொழும்பு, மார்ச் 30

வடக்கு - கிழக்கு யுத்தத்திற்காக ஸ்ரீலங்கா அரசு மேலும் 300 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களையும் யுத்த தளபாடங்களையும் ரஷ்யாவிடமிருந்தும் தென்னாபிரிக்காவிடமிருந்தும் கொள்வனவு செய்ய இருக்கிறது.

இதற்காக ஸ்ரீலங்கா அரச அதிகாரிகள் குழு ஒன்று அந்த இரு நாடுகளுக்கும் விரைவில் செல்லவிருக்கின்றது.

'திவயின' சிங்கள வார இதழ் இச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

மேற்படி ஆயுதக் கொள்வனவு தொடர்பாக சம்பந்தப்பட்ட இரு அரசாங்கங்களுடன் நேரடியாகவே பேச்சு நடத்தப்பட்டதாக ஸ்ரீலங்கா அரச அதிகாரிகள் அரசுக்கு உறுதியாகக் கூறியுள்ளனர்.

ஆனால் கிடைத்த தகவல்களின்படி —

இந்த ஆயுதக் கொள்வனவில் தனிப்பட்ட முகவர்கள் இருவர் சம்பந்தப்பட்டிருப்பது தெரியவந்திருப்பதாக அப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

ரஷ்ய ஆயுதக் கொள்வனவில் சம்பந்தப்பட்ட இலங்கை முகவர் ஒரு சட்டத்தரணி என்றும் —

தென்னாபிரிக்க ஆயுதக் கொள்வனவில் சம்பந்தப்பட்டவர் மின்னணு நிறுவனம் ஒன்றுடன் தொடர்பு பட்டவர் என்றும் 'திவயின' குறிப்பிட்டுள்ளது.

மேற்படி இரு நாடுகளிலிருந்தும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக அந்த அரசுகளுடன் மட்டுமே

(4ஆம் பக்கம் பார்க்க)

சீனாவிடமிருந்து

கப்பல் வாங்கும் திட்டம் கைவிடப்படவில்லையாம்!

இலங்கைக் கடற்படைக்கு சீனாவிடம் இருந்து 75 கோடி ரூபா செலவில் ஐந்து போர்க் கப்பல்களை வாங்குவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது.

இதுதொடர்பாக பீக்கிங்கில் சீன அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வரும் இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மொஹான் சமரசேகர அடுத்த மாதம் 10 ஆம் திகதியே நாடு திரும்புவார் என்றும் அறிவிக்கப்படுகிறது.

நிதிப்பற்றாக்குறை காரணமாக கப்பல்கள் வாங்கும் திட்டம் கைவிடப்பட்டிருப்பதாகவும் —

கடற்படைத் தளபதி சமரசேகராவை உடனே திரும்பி வரும்படி பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டிருப்பதாகவும் —

பத்திரிகைகள் சிலவற்றில் வெளியான செய்திகள் தவறானவை என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருக்கிறது. (உ-எ)

முல்லைத்தீவில் கடும் மோதல் ஆறு வேங்கைகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 30

முல்லை மாவட்டம் தண்ணிமுறிப்பில் நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளைச் சுற்றிவளைக்கும் நோக்குடன் வந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றது.

மோதலையடுத்து பலத்த சேதத்துடன் இராணுவத்தினர் பின்வாங்கினர். மோதலின்போது இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விவரம் தெரியவரவில்லை.

இம் மோதலில் விடுதலைப் புலிகள் இயக்க போராளிகள் அறுவர் வீரச்சாவடைந்தனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ கப்டன் கட்டப்பொம்மன் (நிர்குமார் ராஜ்குமார் - யாழ்ப்பாணம்)

★ லெப்டினன்ட் அருள்மணி அல்லது சேகர் (இரத்தினசிங்கம் சந்திரசேகர் - மட்டக்களப்பு)

★ 2 ஆம் லெப்டினன்ட் அமிமோஅரசு (ராசலிங்கம் அசோக்குமார் - ஓமந்தை)

★ 2 ஆம் லெப்டினன்ட் இளந்திரையன் (திருநாவுக்கரசு சசீதரன் - அளவெட்டி தெற்கு)

★ 2 ஆம் லெப்டினன்ட் சூரன் (செல்லத்துரை தர்சன் - மயிலிட்டி)

★ வீரவேங்கை சேரலாதன் (சிவலிங்கம் சிவானந்தன் - அலம்பில்)

(4 ஆம் பக்கம் பார்க்க)

தெற்குத்தேர்தலை தொடர்ந்து ஐ.தே.கவுக்குள் கொந்தளிப்பு

டி. பி. ஒருபுறம்; ரணில் - கூரே கூட்டணி மறுபுறம்

கொழும்பு, மார்ச் 30

தென் மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியுற்றிருப்பதை அடுத்து அக்கட்சிக்குள் பெரும் கொந்தளிப்பு நிலை உருவாகியிருக்கிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க — கட்சியின் பொதுச் செயலாளர் சிறிசேன கூரே ஆகியோரின் கூட்டு ஆதிக்கத்தை முறியடிக்க ஜனாதிபதி விஜேதுங்க முனைந்துள்ளார்.

சிங்கள வாரப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

ரணில் — கூரே குழுவினர் தமக்கு ஆதரவாக அனுரா பண்டாரநாயக்காவை இணைத்திருப்பது ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு பெரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

அனுரா அமெரிக்காவுக்கு!

கொழும்பு, மார்ச் 30

தென் மாகாண சபைக்கான தேர்தலில் ஐ.தே.க தோல்வியுற்றதற்கு அனுரா பண்டாரநாயக்காவே காரணம் என அக்கட்சிக்குள் ஒருபகுதியினர் குற்றம் சுமத்தி வரும் இவ்வேளையில் —

அனுரா பண்டாரநாயக்கா விடுமுறையில் அமெரிக்கா செல்லவிருப்பதாக சிங்கள வாரப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

இதற்கிடையில் —

தென் மாகாண சபைத் தேர்தல் முடிந்து வாக்குகள் எண்ணப்பட்டுக் கொண்டிருந்த சமயம், நடு இரவில் காலி மாவட்ட செயலகத்துக்கு அனுரா பண்டாரநாயக்கா சென்றார்.

எதிரணியின் சார்பில் முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிட்ட அமரசிறி தொடங்கொடவிடம் சென்று ''தெற்கின் வருங்காலத் தலைவரே'' என்று கூறி கைகொடுத்தாராம்.

அப்போது ஒரேயொரு தொகுதிக்கான தேர்தல் முடிவு மட்டுமே வெளியாகியிருந்தது (உ)

ஐ. தே. க. பிரமுகர்களின் பிரசாரத்திலும் குழப்பம்

கொழும்பு, மார்ச் 30

தென்மாகாணத் தேர்தல் பிரசாரங்களின் போது உரையாற்றிய ஐ. தே. க. பிரமுகர்கள் சிலர் பிரசாரத்தின் போது குளறுபடிகளைச் செய்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் நீண்டகாலம் இருந்த அனுரா பண்டாரநாயக்கா அவ்வேளையில் ஸ்ரீ.ல.சு.க. தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்காக பிரசாரம் செய்தவர்.

ஐ.தே.கவுக்கு அவர் கட்சி மாறிய போதும் பழக்க தோஷம் மாறவில்லை.

கடந்த 19 ஆம் திகதி காலி கப்புஹேன்பல என்ற இடத்தில் ஐ.தே.க. பிரசாரக் கூட்டத்தில் பிரதம பேச்சாளராக கலந்து கொண்டு பேசிய அனுரா தமது பேச்சை நிறைவு செய்தபோது —

(4 ஆம் பக்கம் பார்க்க)

கற்பிட்டியில் மக்கள் இல்லை

கொழும்பு, மார்ச் 30

புத்தளம் கற்பிட்டி, பள்ளியவத்தை, பத்தலகுருவ ஆகிய தீவுகளில் வசித்து வந்த சுமார் 5 ஆயிரம் மக்கள் அப்பகுதிகளைக் கைவிட்டு வேறிடங்களுக்குச் சென்று விட்டனர் என்றும் —

இத்தீவுகள் இப்போது மனித சஞ்சாரமின்றி வெறிச்சோடியிருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ 6)

இன்றும் நாளையும் படகுச் சேவை

யாழ்ப்பாணம், மார்ச். 30

கிளாலி—பூநகரி படகுச் சேவை இன்றும், நாளையும் வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

தவிர்க்க முடியாத காரணத்தால் நேற்று படகுச் சேவை நடைபெறாததுக்கு வருந்துவதாகவும் அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர். (இ-3)

பிரிட்டனில் பிரதமர் ராவின் பாதுகாப்புக்கு புலிகளுடன் 'றோ' உடன்பாடு செய்தது?

புதுடில்லி, மார்ச். 30

பிரதமர் பி.வி.நரசிம்மராவ் சமீபத்தில் பிரிட்டனுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த போது அவரது பாதுகாப்புக்கு விடுதலைப்புலிகள் இயக்கத்திடமிருந்து உறுதி பெற முயற்சி எடுக்கப்பட்டதாம்.

இந்திய பாதுகாப்பு அமைப்பு ஒன்று இந்த முயற்சியில் ஈடுபட்டதாக சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

ஆனால் இந்தச் செய்தியை இந்திய மத்திய அரசு மறுத்துள்ளது.

இச்செய்தி ஆதாரமற்றது; விஷமத்தனமானது. என்று மத்திய அரசுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஞாயிறு வெளியான இந்திய ஆங்கில வார இதழ் ஒன்றில் —

இந்திய உளவுத் துறை அமைப்பான 'றோ' வின் தலைவரும் இன்னும் ஐந்து அதிகாரிகளும் பிரதமர் பி.வி. நரசிம்மராவின் பிரிட்டிஷ் பயணத்துக்கு முன்பதாக ஜேர்மனி, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்கேயுள்ள விடுதலைப்புலிகளின் தலைவர்களைக் கண்டு பிரதமரின் உயிருக்கு எதிரான முயற்சி எதையும் செய்யக்கூடாது என்று தெரிவித்து அவர்களிடம் உறுதிமொழி கேட்டிருந்தார்கள் என்றும் —

அதற்குக் கைமாறாக இந்தியாவில் தம்மீது விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவை அகற்றவேண்டும் என்று விடுதலைப்புலிகள் கோரியிருந்தார்கள் என்றும் விவரிக்கப்பட்டிருந்தது.

புலிகளின் கோரிக்கையை ஏற்று விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க இந்திய அரசிடம் ''றோ'' முயற்சிக்கும் என்றும் —

இது சம்பந்தமான உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஞாயிறு வெளியான இச்செய்தியை மறுநாளே மத்திய

(4 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளுடன் சேர்ந்து இந்திய அரசு ஜெயலலிதாவுக்கு எதிராகச் சதியாம்!

அவரே குற்றம் சுமத்துகிறார்

சென்னை, மார்ச் 30

இந்திய மத்திய அரசு, இந்தியாவில் தடை செய்யப்பட்டிருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் சேர்ந்து தமக்கு எதிராக சதித்திட்டம் தீட்டி வருகின்றது என்று முதலமைச்சர் ஜெயலலிதா குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழ் நாடு சட்டசபைக் கூட்டத்தில் அவர் இக் குற்றச்சாட்டைப் பகிரங்கமாகச் சுமத்தினார்.

அமைச்சர் எஸ். கண்ணப்பன் பேசுகையில் —

ஜெயலலிதாவை ஒழித்துக்கட்ட விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து மத்திய அரசு சதி செய்து வருவதாகத் தெரிவித்தார்.

இக்குற்றச்சாட்டுகளை ஆட்சேபித்து சட்டசபையில் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் நேற்று சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

முதலமைச்சரின் குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து சபையில் கொந்தளிப்பு நிலவியதாக அறிவிக்கப்பட்டது.

தாம் சுமத்திய குற்றச்சாட்டுக்களை மீண்டும் வலியுறுத்துவதாக முதலமைச்சர் கூறவே சபையில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டன.

இந்திய உளவுத்துறை அமைப்பான 'றோ' வின் தலைவரும் மற்றும் அதிகாரி

(4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி

[illegible] போனாலும் போவார்......!

நோயாளர் கப்பல் சேவை நாளை ஆரம்பமாகிறது

வாராந்தம் நடைபெறும்

யாழ்ப்பாணம், மார்ச் 30

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஆதரவில் நடைபெறவிருக்கும் நோயாளருக்கான பருத்தித்துறை — திருகோணமலை கப்பல் சேவை வாராந்தம் வியாழக்கிழமைகளில் நடைபெறும் என அறியவருகிறது.

நோயாளர் கப்பல் சேவையில் ஈடுபடுத்துவதற்காக செஞ்சிலுவைச் சங்கம் 'பிளாம்பயான்' (FLAMBAYAN) என்ற சிங்கப்பூர் கப்பலை வாடகைக்கு அமர்த்தியுள்ளது.

அந்தக் கப்பல் நேற்று கொழும்பு வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறு வந்து சேராத பட்சத்தில் 'நரோமா' கப்பல் இந்த வாரம் மட்டும் நோயாளர் பயண சேவைக்குப் பயன்படுத்தப்படும்.

இன்று மாலை திருகோணமலையிலிருந்து புறப்படும் ''நரோமா'' நாளை காலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

கப்பல் பயணிகள் கடும் சோதனை

வடமராட்சி, மார்ச் 30

கொழும்பில் இருந்து ''நரோமா'' கப்பலில் வந்த பயணிகள் நேற்று காங்கேசன் துறையில் வைத்து நீண்ட நேரம் படையினரால் மிகக் கடுமையாகச் சோதிக்கப்பட்டனர்.

அதனால் கப்பலில் பயணம் செய்த 123 பேரும் 'வாதுவ' கப்பலில் மாலை 5.30 மணியளவிலேயே பருத்தித் துறை வந்து சேர்ந்தனர். பி.ப. 4 மணிக்குப் பின்னரே காங்கேசன் துறையிலிருந்து கப்பல் புறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை வந்து சேர்ந்த ''வாதுவ'' கப்பலில் திருமலை செல்வதற்காக 63 பயணிகள் ஏறிச்சென்றனர்.

வடமராட்சி கிழக்கில் கடற்படையினர் தாக்கு

வடமராட்சி, மார்ச் 30

வடமராட்சி கிழக்குக் கடற்பிரதேசத்தில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் நேற்று முன்தினம் கடும் தாக்குதல்களை நடத்தினர்.

கடற்படையினர் நடத்திய ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களால் மீனவர்களின் பலலாயிரக் கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த மீன்பிடி உபகரணங்கள் சேதமடைந்தன. கட்டுமரம் ஒன்று சுக்குநூறானது. மீனவர்கள் கடலில் குதித்து நீந்திக் கரை சேர்ந்தனர்.

நேற்று முன்தினம் காலை 6 மணியளவில், வெற்றிலைக்கேணியிலிருந்து காங்கேசன்துறை நோக்கி விசைப்படகில் வந்து கொண்டிருந்த கடற்படையினர் உடுத்துறை தொடக்கம் தாளையடி வரை சரமாரியாக பீரங்கித் தாக்குதலும், ஷெல் வீச்சும் நடத்தினர்.

மீண்டும் தாளையடியிலிருந்து திரும்பி வந்து உடுத்துறை வரை இரண்டாவது முறையாகவும் — தொழிலில் ஈடுபட்டிருந்த — மீனவரை நோக்கிக் கடும்தாக்குதல்களை நடத்தினர். அதன் பின்னர் விசைப்படகு காங்கேசன்துறை நோக்கிச் சென்றது.

எதிரணி மீதான தாக்குதல் ஐ.ஜி.பியிடம் நேரில் முறையீடு

கொழும்பு, மார்ச் 30

தென் மாகாணத்தில் பொலீஸ் அதிகாரிகள் சிலரின் உதவியுடன் அரசு ஆதரவாளர்கள் நடத்தி வரும் தாக்குதல்கள் குறித்து பொலீஸ் மா அதிபரிடம் நேரடியாக முறையிடப்பட்டுள்ளது.

மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க, தென் மாகாண முதலமைச்சராக மீண்டும் நாளை பதவியேற்கவிருக்கும் அமரசிறி தொடங்கொட, சுதந்திரக் கட்சி எம். பியான அனுருத்த ரத்வத்தை மற்றும் டியூ குணசேகரா ஆகியோரடங்கிய குழு ஒன்று பொலீஸ் மா அதிபர் பிராங்க் டி சில்வாவைச் சந்தித்து இத்தாக்குதல்களை நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டது.

இத்தாக்குதல் நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டுள்ள பொலீஸ் அதிகாரிகளை அவர்கள் பணிபுரியும் பொலீஸ் நிலையங்களில் இருந்து வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யும்படியும் தூதுக்குழு பொலீஸ் மா அதிபரைக் கேட்டுக் கொண்டது.

பிரஸ்தாப சம்பவங்கள், அவற்றுடன் சம்பந்தப்பட்ட பொலீஸ் அதிகாரிகள் பற்றிய விவரங்களை தமக்கு நேற்று மாலைக்குள் தரும்படி

(4 ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ்சிறு விளம்பரம

விற்பனைக்கு

மேசை, மீன்தொட்டி, மர உரல், சந்தோர்மேசை, சிறிய பெரிய கட்டில்கள், அலுமாரி, கபேட், கம்பளை காப்பெற் என்பன விற்பனைக்குண்டு. சி. நாதன், 16/3, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (7166)

கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பூசிபோட்ட ஒரு மாத Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30140)

புறொயிலர் குஞ்சு

பிறிமா புறோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஓடர் கொடுத்தவர்கள் உடன் பெற்றுக்கொள்ளவும். தேவையானோர் உடன் தொடர்பு கொள்ளவும். 'மல்லிகாபதி', சந்தை இழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (30058)

மணிக்கூடு திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். சகல மணிக்கூட்டு பற்றிகளும் எம்மிடம் உண்டு. உதிரிப்பாகங்களுக்கான மணிக்கூடுகள் வாங்கப்படும்: குடும்ப அட்டையுடன் வரவும். ''கஜன்ஸ் வோச் வேக்ஸ்'' 12, புகையிரத நிலைய வீதி, சுன்னாகம் சந்திக்கருகில். (7168)

தேவை

தமிழ் தட்டெழுத்தாளர் (Typist) தேவை. 30-03-94 புதன் காலை 8.00 — 1.00 மணிக்கு நேரில்வரவும். Bond, யாழ்ப்பாணம், [7164]

தமிழ், ஆங்கில புதிய, பழைய தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. R மருதலிங்கம், இல. 8/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (30118)

இறைச்சிக் கோழிகள் தேவை. உடன் தொடர்பு கொள்க: நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30139)

டாக்டர்கள் தேவை

M.B.B.S., R.M.P., A.M.P. தரத்திலுள்ள டாக்டர்கள் யாழ். குடாநாட்டுக்குள்ளும், வெளியிலும் (வன்னிப் பிராந்தியம்) இயங்கும் பொதுஸ்தாபனத்தில் கடமையாற்றத் தேவை. 1-4-94 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். நிர்வாகி: விக்லியம் ஹாவே, தனியார் மருத்துவமனை, இல 17, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (30003)

வேப்பெண்ணெய்

சுத்தமான வேப்பம் எண்ணெய் எம்மிடம் விற்பனைக்குள்ளது. ''மில்க்வைற்'' (சி-7628)

காணவில்லை

மூன்று வயது மதிக்கத்தக்க இரண்டு பசுக் கன்றுகள் ஒன்று சிப்பு, வெள்ளை கறுப்பு கலந்தது. இரண்டாவது சிவப்பு நிறம். நாச்சிமார் கோயிலுக்கும், தட்டாதெரு சந்திக்கும் இடையில் காணாமல் போய்விட்டன. தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து அறிவிக்கவும். பாபு எரிபொருள் விற்பனை நிலையம், தட்டாதெரு சந்தி. சன்மானம் வழங்கப்படும். (30126)

தவறிவிட்டது

28-3-94 அன்று ரூபா 667/70சதத்திற்கான 70799 இலக்க திருகோணமலை மக்கள் வங்கிக் காசோலை பலாலி வீதியில் திருநெல்வேலிக்கும், வேம்படிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து Dr. R S நவரட்ணம், செயற்கைமுறைகருவினைப் படுத்தும் நிலையம், திருநெல்வேலி என்ற விலாசத்தில் கையளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். (30125)

16 பேர் கைது

கொழும்பு, மார்ச் 30

மாத்தளை மாவட்டத்தில் கடந்த வெள்ளியன்று தேடுதல் நடத்திய பொலீஸார் 16பேரை கைது செய்துள்ளனர்.

வெளிமாவட்டங்களில் இருந்துவந்து பொலீஸில் பதிவு செய்யாது உறவினர் நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்தவர்களே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களில் நால்வர் பெண்கள், ஒருவர் சிங்களப் பெண், ஏனையோர் தமிழர்கள்.

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம:

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருடம் பங்குனித் திங்கள் 18ஆம் நாள் (31 - 03 - 1994) வியாழக்கிழமை காலை 8-49 மணி முதல் 9-11மணி வரையுள்ள அனுஷ நட்சத்திரம் இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
சசிகரன் (சசி)
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
ரேவதி
அவர்களுக்கும்

யாழ். வண்ணை அருள்மிகு காமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோயில்) திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற பெரியோர்களால் நிச்சயிக்கப் பெற்றிருப்பதால், இம் மங்கள நன்நாளில் தாங்களும் குடும்ப சமேதரராய் வருகை தந்து புதுமணத்தம்பதிகளுக்கு நல்வாழ்த்து கூறி சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்:

மணமகள் இல்லம் 31 — 03 — 1994 மாலை 4-00 மணி தொடக்கம் மாலை 6-30 மணி வரை

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. இரா. பத்மநாதன்,
601, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

திரு திருமதி பொ பரமநாதன்,
654/3, கே. கே எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

[30093]

கண்ணீர் அஞ்சலி

ஓராண்டு

அமரர்
மாணிக்கம் பாலசுப்பிரமணியம்

பிறப்பு: 11 — 05 — 1919
இறப்பு: 09 — 04 — 1993

ஈராண்டு

அமரர்
மகேஸ்வரி பாலசுப்பிரமணியம்

பிறப்பு: 02 02 — 1928
இறப்பு: 18 — 11 — 1991

திதி: 30 - 03 - 1994

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

77, நாயன்மார் வீதி,
நல்லூர்.

வீடு விற்பனைக்கு

உடுப்பிட்டி, சந்தை வீதியில் கடையுடன் கூடிய மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. கீழ்த்தளத்தில் ஒரு அறையும் விசாலமான விறாந்தையும், மேல்மாடியில் இரண்டு அறைகளும் உண்டு.

பார்வையிடுவதற்கும் விவரங்களுக்கும்:

திரு. த. அபூர்வசிங்கம்
சந்தை வீதி, உடுப்பிட்டி.

அல்லது

திருமதி சே. வசந்தாதேவி
இல: 73, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(ஈழநாடு அருகில் — ஓமேகா முன்)

(30124)

வெளியரங்க சிலுவைத் தியானக் கூட்டம்

இடம்: கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்னால் உள்ள கல்வாரி இலவச வைத்தியசாலை வளவில் நடைபெறும்

காலம்: 01 - 04 - 1994

நேரம்: இரவு 9-00 — அதிகாலை 5மணி வரை
(பாடல்கள், செய்திகள், விண்ணப்பங்கள்)

''ஒரு மணிநேரமாவது என்னோடு (இயேசு) விழித்திருக்கக் கூடாதா?''

''அனைவரும் கலந்து கொண்டு ஆசீர்வாதம் பெறுங்கள்''

கூட்ட ஒழுங்கு:

கல்வாரி — எபநேசர்
சபைப் போதகர்
கல்வாரி பூரண சுவிசேஷ ஊழியங்கள்,
இல: 89 பிறவுண் வீதி,
கொக்குவில்.

(லூக் 26: 40)

(30138)

ஊர்காவற்றுறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

துவிச்சக்கரவண்டி தேவைப்படும் ஊர்காவற்றுறை ப. நோ கூ. சங்கத்தின் முழுமையான பங்கைச் செலுத்திய அங்கத்தவர்கள், 4-4-1994 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் விண்ணப்பங்களை தலைமைக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும்.

— பொதுமுகாமையாளர்.

(சி-7626)

4ஆம் ஆண்டு நீங்காத நினைவுகள்

விஸ்வலிங்கம் ரோகினி

தோற்றம்: 1967 - 10 - 22
மறைவு: 1990 - 03 - 15
திதி: 30 — 03 — 1994

ஆண்டு நான்கு சென்றாலும், உன் நினைவலைகள் அழியா.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

பெற்றோர், சகோதரங்கள்,
அத்தான்மார், அண்ணி

வேரோதேசும்பு
கல்வியங்காடு.

(30141)

கடை விற்பனைக்கு

யாழ்நகர் கே. கே. எஸ். வீதியில் இலக்கம் 61 இல் அமைந்துள்ள கடை விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

1) பா. தவபாலன்
(சட்டத்தரணி)
8 ஆம் குறுக்குத்தெரு, நல்லூர்.

2) றூபன் கடை
திருநெல்வேலிச் சந்தி.

3) பொ. காங்கேயன்
(சட்டத்தரணி)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,

4) ச. முத்துக்கிருஷ்ணன்
(சட்டத்தரணி)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(30130)

CHUNDIKULI GIRLS' COLLEGE
VACANCY

1. Graduate to teach Physics & Pure Mathematics in the A/L Classes
2. Trained/ or Graduate to teach English for Yr. 6 — Yr. 11.

Applications Close on Friday 8th April 1994

- PRINCIPAL.

(G/7624)

சன்மார்க்க சபை — குரும்பசிட்டி

மணிவிழா நிகழ்ச்சித் தொடர் - 05
நாடகமும் அரங்கியலும்
கல்வியியற் கருத்தரங்கு

இடம்: நாவலர் கலாசார மண்டபம்,
யாழ்ப்பாணம்

காலம்: 01. 02 — 04 — 1994 வெள்ளி, சனி
காலை 8-30 மணிமுதல் -
பிற்பகல் 4-00 மணி வரை

தலைவர்: கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை

தொடக்கவுரை: திரு. நா. தவநாதன்
(தலைவர், தெல்லிப்பழை ப.நோ கூ. சங்கம்)

கருத்தரங்கு

''தமிழ் நாட்டின் நாடக வரலாறு''

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மணிவிழாக்குழு,
சன்மார்க்கசபை

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.

[30142]

முதலாவது ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 22 — 09 — 1977

உதிர்வு: 10 — 04 — 1993

செல்வன் முருகதாஸ் யோகதர்சனன்

திதி:- 30-03-1994

பன்னிரு திங்கள் பறந்து போனதையா ஆனாலும்
எங்கள் கண்ணின் மணியே — யோகனே
உந்தன் காட்சிகள் போகவில்லை, எண்ணிரு
வயதில் எமனாய் உனக்கோர் எதிகணை வந்ததையா
எங்கள் இதயக் கனவுகள் யாவையும்
இங்கு இடித்துத் தகர்த்ததையா — யோகனே
உன்னிரு விழிகளும், நினைவும் நித்தமும்
எம் நெஞ்சில் நர்த்தனம் போடுதையா — அதனால்
எம்மிரு விழிகளும் தினம்தினம் இங்கே
கண்ணீராக கரையுதையா.

எமது இல்லத்தில் இன்று நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பூசையில் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

அன்னாரின் பிரிவால் வாடும்;
முருகதாஸ் குடும்பத்தினர்.
(கல்வாலி கார் உரிமையாளர்)

சோந்தம்பை,
சப்பரமலை,
வல்வெட்டித்துறை.

(30143)

உதயன்
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

பயங்கரவாதப் போட்டி!

அரசாங்கம் தென் மாகாணத்தில் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றம் சுமத்தியுள்ளார். கடந்த வாரம் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் எதிரணிக்கு ஆதரவாக நடந்து கொண்ட மக்களைப் பழி வாங்கும் விதத்திலும், வஞ்சம் தீர்க்கும் வகையிலும் அவர்கள் மீது வன்செயல்கள் கட்டவிழ்த்துவிடப்படுவதாகவும், இம்சிக்கப்படுவதாகவும் பொலிஸ் மா அதிபருக்கு அவர் முறையிட்டிருக்கிறார்.

எதிரணி ஆதரவாளர்களின் வீடுகளுக்கு இரவு வேளைகளில் செல்லும் ஐக்கிய தேசியக் கட்சிக் குண்டர்களும், பொலிஸாரும் அவர்களைத் தாக்கி வருவதாகவும், பயமுறுத்தி வருவதாகவும் சுயேச்சையான தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனதா விமுக்தி பெரமுனவை(ஜே. வி.பியை) ஒழித்துக்கட்டுவதாகக்கூறி எண்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள மக்களை ஐக்கிய தேசியக் கட்சி அரசு, பிரேமதாசா காலத்தில் கொன்றொழித்தது. அது தெற்கின் இரத்த வரலாறாகப் பதிந்திருக்கிறது. இராணுவத்தினர் ஒருபுறமும், ஐ.தே.கவின் கொலைக் குழுக்கள் மறுபுறமுமாக மக்களை இரவில் கைது செய்து — கூட்டிச் சென்று— அடுத்த நாள் ரயரில் எரிந்த பிணங்களாக வீதிகளில் போட்ட யுகத்தை தென்னிலங்கை எங்கும் வாழும் மக்கள் மறக்கமாட்டார்கள்.

மீண்டும் அதே போன்ற ஒரு ''யுகத்தை'' உருவாக்க விஜேதுங்கா (ஐ. தே. க.) அரசு முனைந்திருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. தனது பதவி நிலைப்பதற்கு ஜே. வி. பி. சவாலாகிவிடக்கூடாது என்பதற்காக பிரேமதாசா அந்த அட்டூழியத்தை புரிந்தார்.

இப்போது தாம் பதவிக்கு வருவதற்காக விஜேதுங்கா மீண்டும் தெற்கில் கொலைக் களத்தை உருவாக்க முனைந்திருக்கிறார். வாழையடி வாழையாக அராஜகமும், அட்டூழியமும் கைமாறாவிடில் எவ்வாறு ஐ. தே. கட்சியின் பாரம்பரியத்தைப் பேணுவது!

ஜனநாயகம் என்ற பெயரில், சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டுவது என்ற போர்வையில் இலங்கையில் ஆட்சியில் இருக்கும் கட்சிகள் படையினரின் பக்கத் துணை கொண்டு, தனித்தும் பயங்கரவாதம் புரிவது புதியது அல்ல.

தமிழர்கள் தமது உரிமைகளைக் கேட்கத் தொடங்கியதும், போராட ஆரம்பித்ததும் அவர்கள் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டதில் தெற்கின் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் ஒன்றைவிட மற்றது குறைந்ததல்ல. அந்த அடக்குமுறை ஆரம்பமே இப்போதைய அரச பயங்கரவாதமாக வளர்ச்சி கண்டது. தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைக் கேட்டதற்காக, போராடுவதற்காக அவர்களுக்கு எதிராக அரச பயங்கரவாதம் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகிறது.

அந்தப் பழக்கத்தில்தான், சிங்கள மக்கள் எதிரணிக்கு வாக்களித்தார்கள் என்பதற்காக அவர்கள் மீதும் அரச பயங்கரவாதம் தனது கூரிய பற்களைப் பதிக்க முனைகிறது. அரச பயங்கரவாதத்தை எதிர்த்து தெற்கில் எதிரணிப் பயங்கரவாதமும் மிக இலகுவாகப் பிறந்து விடும்.

ஏனெனில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் 1971 ஏப்ரலில் அரச பயங்கரவாதத்தை ஆயுதமாக்கி பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர், யுவதிகளைக் கொன்றுகுவித்தது. பயங்கரவாதத்தில் கைதேர்ந்த இருசாராரும் போட்டிபோட்டு மோதினால் அங்கு வடக்கைவிட நிலைமை மோசமாகும்.

அப்போதுதான் தமிழர்கள் தமது உரிமைக்காகப் போராடுவது பயங்கரவாதமா அல்லது சிங்களவர்கள் ஆட்சியைப் பிடிக்கும் போட்டியில் மோதிக்கொள்வது பயங்கரவாதமா என்பது சிங்கள மக்களுக்குப் புரியும்.

கிழக்கிலும், வவுனியாவிலும்

தேர்தல் கடமையில் ஈடுபட மறுத்த 50 அதிகாரிகள் மீது நடவடிக்கை

பெரும்பாலானோர் தமிழர்

கொழும்பு, மார்ச் 30

கிழக்கு மாகாணம் மற்றும் வவுனியா உள்ளூராட்சித் தேர்தலின் போது தேர்தல் கடமைகளில் ஈடுபட மறுத்த 50 அரச உயர் அதிகாரிகளின் பெயர், விவரங்கள் மேல் நடவடிக்கைக்காக ஜனாதிபதிக்கு தேர்தல் ஆணையாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவர்களில் பெரும்பாலானோர் சிரேஷ்ட தமிழ் அரச அதிகாரிகள் என்று தெரிவிக்கப்படுகிறது.

உதவி தெரிவத்தாட்சிகளாக நியமிக்கப்பட்ட இவர்கள் அனைவரும் தேர்தல் தினத்தன்று கடமைக்குச் சமுகமளிக்கவில்லை.

இவர்களிடமிருந்து விளக்கம் கோரி, ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் படியும் தேர்தல் ஆணையாளர், ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

இயக்குநர்கள், பிரதி இயக்குநர்கள், சூப்பிரிண்டன்கள், சிரேஷ்ட வருமானவரி அதிகாரிகள், பிரதி ஆணையாளர்கள், பிரதம கணக்காளர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதம பொறியியலாளர்கள் ஆகியோர் இவர்களில் உள்ளனர்.

முன்கூட்டியே அறிவிக்காமல் இவர்கள் அனைவரும் தேர்தல் தினத்தன்று கடமைக்குச் சமுகமளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன்காரணமாக தேர்தல் தினத்தன்று தேர்தல் திணைக்களம் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியதாயிற்று என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ-9)

துப்பாக்கி வெடித்து வாக்காளர் காயம்

கான்ஸ்டபிள் வேலை நீக்கம்

கொழும்பு, மார்ச் 30

தென்மாகாணசபைத் தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலையம் ஒன்றுக்கு வெளியே நின்று கொண்டிருந்த வாக்காளர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சம்பவம் ஒன்று தொடர்பாக பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

அம்பலாங்கொட பகுதியில் உள்ள கொடவெல ஆரம்பப் பாடசாலையின் முன்னால் இச்சம்பவம் இடம்பெற்றது.

வாக்களிப்பு நிலையத்துக்கு அருகே நின்று கொண்டிருந்த சிலரை கலைக்க கான்ஸ்டபிள் எக்கநாயக்கா முயற்சித்த சமயம் அவர் வைத்திருந்த ரி - 56 தானியங்கித் துப்பாக்கியில் இருந்து தற்செயலாக வெடிச்சத்தம் கேட்டது என்றும் — அச்சமயம் அங்கு நின்ற வாக்காளர் ஒருவர் காயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கான்ஸ்டபிளின் துப்பாக்கி 23 சுற்றுகள் சுட்டது என்று விசாரணை நடத்தும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கவனயீனமாக நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டின் மீது சம்பந்தப்பட்ட கான்ஸ்டபிள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ 9)

தாக்குதல்கள் குறித்து அரச அதிபர் முறையீடு

யாழ் மாவட்டத்தில் பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது தொடர்ந்து நடத்தப்படும் ஷெல் தாக்குதல்கள் மற்றும் மீனவர் மீதான தாக்குதல்கள் குறித்து யாழ் அரச அதிபர் திரு க. மாணிக்கவாசகர் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தில் நடந்த இச்சந்திப்பில் யாழ் மாவட்ட மக்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து அரச அதிபர் எடுத்து விளக்கினார்.

திருகோணமலையில் கடற்படையினரின் சோதனையை முடித்துக் கொண்டு 'நரோம' கப்பலில் வரும் பயணிகளை காங்கேசன்துறையில் மீண்டும் கடற்படையினர் சோதனையிட்டு பொருள்களை பறிமுதல் செய்யும் விவகாரம் குறித்தும் அரச அதிபர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் முறையிட்டதாகத் தெரியவந்தது. (உ-3)

அரச அதிபர் சிபார்சுடன் கிராம அலுவலர் நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ். மாவட்டத்தில் அரச அதிபரின் சிபார்சுடன் கிராம சேவையாளர்களை நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் கிராம சேவையாளர்கள் பதவிக்கு நடந்த நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்க பொலிஸ் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் நிபந்தனை விதித்திருந்தார்.

யாழ். மாவட்டத்தில் பொலிஸ் அறிக்கை பெற முடியாத நிலை இருந்ததால் நியமனம் வழங்குவது தாமதமாகியது.

யாழ். அரச அதிபரின் சிபார்சுடன் இவர்களுக்கு நியமனம் வழங்க அமைச்சரவை தற்போது அனுமதி வழங்கியுள்ளது. (உ-3)

வடக்கு - கிழக்கில் அமைதி ஏற்பட்டால் கூடுதல் நிதி உதவி

உலக வங்கியின் உயரதிகாரி தெரிவிப்பு

வடக்கு-கிழக்குப் பிராந்தியத்தில் அமைதி நிலவுமானால், உலக வங்கியும் இதர சர்வதேச நிதி நிறுவனங்களும் இலங்கைக்குக் கூடுதல் நிதி உதவிகள் வழங்குவதை பரிசீலனை செய்யமுடியும்.

உலகவங்கியின் வதிவிடப் பிரதிநிதியாக கொழும்பில் பணிபுரியும் திரு. ரொபர்ட்டோ பெஞ்சரொட்டற் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் உலகவங்கியின் உயர்நிலைக்குழு ஒன்று அடுத்த மாதம் இலங்கை வரவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தெற்காசியப் பணிப்பாளரும் இலங்கைக்கு உதவும் நாடுகளின் குழுவின் தலைவருமான போல் இஸன்மான் மற்றும் இப்பிராந்தியத்துக்கான பிரதம பொருளாதார நிபுணர் கோபிநாத் நன்கலி ஆகியோர் இக்குழுவில் இடம் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கவே இக்குழு வருவதாகத் தெரிவித்த உலகவங்கியின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி ரொபர்ட்டோ பெஞ்சரொட்டற் குழுவினரின் வருகைக்கான ஒழுங்குகளைச் செய்வதில் தாம் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

தாம் மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்காவுடன் அவரின் அதிகாரிகளுடனும் கொழும்பு சுற்றுப்புறச் சூழல் அபிவிருத்தித் திட்டம், தேசிய சுற்றுப்புறச் சூழல் நடவடிக்கைத் திட்டம் ஆகியன குறித்து பேச்சு நடத்தியதாகவும் அவர் கூறினார். [இ-எ-9]

தமிழ்க் கந்தையா மாணவன் சாதனை

அரசின் தரப்படுத்தலுக்கும் இனவாதத்துக்கும் சவால்

பாராட்டு விழாவில் இளம்பரிதி

வலிகாமம் தெற்கு, மார்ச் 30

''அகில இலங்கையிலும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் ஒரு தமிழ் மாணவன் சித்தியடைந்திருப்பது அரசாங்கத்தின் தரப்படுத்தலுக்கும், சிங்கள இனவாதத்துக்கும் ஒரு அடியைக் கொடுத்திருக்கிறது''

புலமைப் பரிசில் பரீட்சையில் முதலிடம் பெற்ற சுந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை மாணவன் செல்வன் ஜி. பிரகாஷுக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் திரு. இளம்பரிதி இவ்வாறு கூறினார்.

தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் நூற்றாண்டுக் கலை விழாவின் போது செல்வன் பிரகாஷ் மற்றும் புலமைப் பரிசில், பொதுப் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள் பாராட்டப்பட்டனர்.

அதிபர் திரு. க. செல்வக்குமாரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. இளம்பரிதி மேலும் கூறியதாவது —

எமது பிரதேசத்தில் மாணவர்கள் கல்வியை ஒழுங்காகப் பெறக்கூடிய வாய்ப்புக்களை அரசாங்கம் திட்டமிட்டு ஒழித்து வருகிறது. அமைதி இல்லை; வெளிச்சம் இல்லை; பாடசாலைகள் சீராக இயங்க முடியவில்லை.

யுத்தம் என்ற சாட்டைக் கூறி தமிழினத்தின் கல்விச் சொத்தை திட்டமிட்டு சிங்கள அரசு ஒழித்து வருகிறது. இத்தனையையும் மீறி ஒருவர் கல்வியில் வளர்ச்சி பெற்றால் அந்த தரப்படுத்தல் முறை தமிழருக்கு குழி பறிக்கின்றது.

உடல் வளம், உளவளம், உணர்வு வளம் பாதிக்கப்பட்ட நிலையிலும் நாடளாவிய பரீட்சையில் தமிழன் ஒருவன் முதலிடம் பெறுவது சிங்கள அரசின் இனவாதத்துக்கும் தரப்படுத்தல் கொள்கைக்கும் ஒரு சவாலாகும்.

ஆசிரியர்கள் [illegible] களின் [illegible] மாணவனின் விடாமுயற்சியுமே இவ்வெற்றிக்கு காரணம். ஆரம்ப இடைநிலை, உயர்நிலை கல்விகளில் முழுமையான கல்வியை பெறவேண்டும். அப்போதுதான் தமிழரின் கல்வியை உலகம் வியந்து பேசும்.

இப்படி அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு க. சுந்தரசாமி தமது பாராட்டுரையில், மாணவன் ஆசிரியரை மதிக்க வேண்டும். ஆசிரியர் மாணவரை நேசிக்க வேண்டும். இந்த நிலை இருந்தால் தான் சமுதாயம் வளர்ச்சி பெறும்.

ஆசிரியர் — மாணவர் தொடர்பு நிலை சமுதாய வளர்ச்சிக்கு முக்கியமானது. எமது மாவட்ட பெறுபேறுகள் குறைந்து வரும் காலத்தில் இத்தகைய பெறுபேறு எம்மை பெருமைப்பட வைக்கிறது எனக் கூறினார்.

பாடசாலை நிர்வாகத்தினராலும், பழைய மாணவர் சங்கத்தினராலும் வழங்கப்பட்ட விருதுகளையும் சான் [illegible] சாரி வழங்கினார். (இ-15அ)

வெட்டுப்புள்ளி தமிழ் மாணவருக்கு சாதகமாக அமையவில்லை

கல்விமான்கள் கருத்து

யாழ்ப்பாணம், மார்ச் 30

1993/94 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக தெரிவு வெட்டுப் புள்ளிகள் தமிழ் மாணவர்களுக்கு சாதகமாக அமையவில்லை.

இப்படி யாழ்ப்பாண கல்விமான்கள் பலர் சுட்டிக்காட்டி உள்ளனர்.

மருத்துவம், பொறியியல், பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், ஆகிய துறைகளில் அனுமதிக்கு வெட்டுப் புள்ளி சாதகமாக அமையவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

தமிழ் மொழி மூலம் கல்வி போதிக்கும் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் போதியளவு மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறாமல் போவதாகவும் கல்விமான்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

யாழ்: பல்கலைக்கழகத்தில் உள்ள துறைகள் சிலவற்றை பல்கலைக்கழகங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், யாழ். பல்கலைக்கழகத்துக்கு யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு வவுனியா மாவட்ட மாணவர்கள் மட்டுமே அனுமதி பெறக்கூடியதாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அன்னை பூபதி நினைவு சிரமதானம்

அன்னை பூபதி நினைவாக இன்று 30ஆம் திகதி மந்துவில் மரிக்கார் சனசமூக நிலையமும் பனை இத்தாவில் சக்தி சனசமூகநிலையமும் ஆகியன துப்புரவு செய்யப்படும். [த]

தப்பி ஓடிய சிப்பாய் மீது பொலிஸ் சூடு

தப்பி ஓடிய இராணுவச்சிப்பாய் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக நவகமுவ பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு இம் மாதம் 31ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

தமது வீட்டுக்குள் அத்துமீறிப் பிரவேசித்த ஒருவர் மீது சந்தேக நபரான சப் இன்ஸ்பெக்டர் தமது ரிவோல்வரால் சுட்டதாகவும்.

மூன்று தினங்களுக்குப் பின்னர் தப்பியோடிய இராணுவச் சிப்பாயான சமிந்தகுமாரா என்பவரின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அருகில் இருந்த பற்றைக் காட்டினுள் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபரான விஜேசிங்க ஹோமாகம நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டார். (இ-எ-9)

ஜெயலலிதா அணிவது குண்டுதுளையா ஆடையா?

சென்னை மார்ச் 30

குண்டு துளைக்காத ஆடையை தாம் ஒரு போதும் அணிந்ததில்லை என்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்தார்.

தமிழ் நாடு சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து, ஐக்கிய பொதுவுடமைக் கட்சி உறுப்பினர் எஸ். வி. சண்முகம் பேசுகையில் ஜெயலலிதா குண்டு துளைக்காத ஆடையை அணிவதாகத் தெரிவித்தார்.

அவர் பேசிய போதே ஜெயலலிதா குறுக்கிட்டு தாம் அப்படியான ஆடையை ஒருபோதும் அணிந்ததில்லை என்று கூறினார்.

''புரட்சித் தலைவி முதலமைச்சர் ஆனதும் தனது உயிரையும் பொருட்படுத்தாது அந்நிய சக்திகளை ஒழித்தார். தேசிய ஒருமைப்பாட்டைக் காப்பாற்றினார். இதனால் அவர் குண்டு துளைக்காத ஆடைகளை அணிகிறார்'' என்று திரு. எஸ். வி. சண்முகம் தனது உரையில் தெரிவித்திருந்தார். (இ)

வட இந்தியாவில்

இனரீதியாக மேலும் சில மாநிலங்கள்

காங்கிரஸ் தலைவர்கள் வலியுறுத்து

வட இந்தியாவில் இன மொழி ரீதியில் மேலும் புதிய மாநிலங்களை உருவாக்க வேண்டும் என்று இந்திய காங்கிரஸ் தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

மத்தியப் பிரதேசத்தில் சத்தீஸ்கர் என்ற பேரிலும்— உத்தரப் பிரதேசத்தில் உத்தர்கண்ட் என்ற பேரிலும் — பீஹார் மாநிலத்தில் ஜார்க்கண்ட் என்ற பெயரிலும் — புதிய மாநிலங்கள் உருவாக்கப்பட வேண்டும் என வற்புறுத்தப்படுகின்றன.

டென்மார்க்கில் விநாயகர் ஆலயம்

டென்மார்க்கில் உள்ள வேலின் நகரத்திலுள்ள தமிழர் சித்தி விநாயகர் ஆலயம் ஒன்றை அங்கு அமைத்துள்ளனர்.

இவ்வாலயத்தின் மகா கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. (க-17)

''கீர்த்தனைமாலை'' வெளியீடு

இணுவில் சிவகாமி அம்பாள் மீது திருமதி பாரதி மயூரநாதனால் பாடப்பட்ட ''கீர்த்தனைமாலை'' எனும் நூல் கடந்த 11ஆம் திகதி வெளியிடப்பட்டது. (அ)

அரசியல்வாதியின் மகனுக்காக

விமானம் ஓட்டுநர் பதவி கல்வித்தரம் குறைப்பு!

கொழும்பு, மார்ச் 30

செல்வாக்குமிக்க அரசியல்வாதி ஒருவரின் மகனுக்கு இடமளிப்பதற்காக எயர்லங்கா விமான சேவை நிறுவனம் விமானம் ஓட்டுநர் (விமானி) பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகளை வெகுவாகக் குறைத்திருப்பதாக தெரிய வருகிறது.

விமானம் ஓட்டுநர் பதவிக்கு விண்ணப்பிப்போர் கட்டாயமாக ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்று இருக்க வேண்டும்.

இப்போது கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் சித்தி பெற்றிருந்தால் போதுமானது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கணிதத்தில் சித்தி எய்தத் தவறியவர் [illegible] விமான ஓட்டுநராகலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விமான ஓட்டிகளாக வர விரும்புபவர்கள் விமானங்களை தரை இறக்குவது, தரையில் இருந்து மேலே எழும்புவது பறப்பது போன்ற கடமைகளைச் செய்பவர்களாக இருப்பதால், அவர்கள் கணிதத்தில் பூரண அறிவு பெற்றிருக்க வேண்டும் என்பது விமான சேவைத் துறையில் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிபந்தனையாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு விமானசேவை நிறுவனங்கள் தங்களின் விமானிகள் பட்டதாரிகளாக இருக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்து உள்ளன.

இலங்கை விமானப்படை ஜி சி ஈ. உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானம் அல்லது கணிதத் துறைகளில் இரண்டு பாடங்களில் சித்தி எய்தியவர்களையே விமானம் ஓட்டுநர் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்கிறது.

அத்துடன் விண்ணப்பதாரர்கள் ஜி சி ஈ சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்களில் சித்தி எய்தி இருக்க வேண்டும் என்றும் விமானப்படை நிபந்தனை விதித்துள்ளது.

எயர்லங்கா நிறுவனம் விமான ஓட்டிகளாக வர விரும்புபவர்களுக்கு விதித்துள்ள கல்வித் தகைமை, ரயில் என்ஜின் சாரதிகளாக வருபவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கல்வித் தகைமைகளிலும் பார்க்க மிகக் குறைவானதாகும்.

ரயில் சாரதி பதவிக்கு விண்ணப்பிப்போர் ஜி. சி. ஈ. சாதாரணப் பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும் என்று ரயில்வே திணைக்களம் நிபந்தனை விதித்துள்ளது.

எயர்லங்காவில் விமானிகளாக வர விரும்புபவர்கள் ஜி. சி. ஈ சாதாரணப் பரீட்சையில் ஏதாவது நான்கு பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருந்தால் போதுமானது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ-9)

மனையினைச் சுற்றி ஒரு பிடி நிலமும
மிதிபடாவண்ணம் பயிரினை வைப்போம்

60ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
ஜோஹன்னா அழகம்மா றிச்சேட்ஸ்
(செல்வி வோல்டன்)

1994-01-29ஆம் திகதி காலமான எமது பாடசாலை முன்னாள் ஆசிரியரும், பழைய மாணவியுமான திருமதி ஜோஹன்னா அழகம்மா றிச்சேட்ஸ் அவர்களின் மறைவின் 60ஆம் நாள் ஆகிய இன்று அன்னாரை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
மெதடிஸ்த பெ. உ. பா.
பருத்தித்துறை. (சி-7629)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 14 — 12 — 1949

உதிர்வு: 10 — 04 — 1993

அமரர் கந்தையா புவனேந்திரன்

மக்கள் சேவையில் மரணித்தீர்
தேசம் புடைசூழ தெருவெல்லாம் சென்று
தீயிட்டு உமை எரித்தோம்
உம் சேவை இங்கே தீப்பிளம்பாய் ஒளிர்கிறது
பாதி வழியிலெமைப் பதறவிட்டுச் சென்றீர்
பக்குவமாய் எமைக் காக்கும்
உம் பயனுள்ள சேவை.

விண்ணிலே பட்டொளியாய்
விரிந்து பரந்திருந்து
சூரியனாய்க் கதிர் வீசிச் சுடர்விட்டு
வண்ண நிலவாய் வான் வெளியே திரிந்து
முத்துக்கள் நட்சத்திரமாய் கண்சிமிட்டி
தென்றலாய்............ பல வடிவில்
எமைப் பார்த்துச் செல்லுகின்றீர்.

எம் தலைவா!
உமை ஒரு தரம் காண ஆசையுடன்
ஓராண்டு தவமிருந்தோம்
வருவாயா........?
பார்த்துவிட்டு நாம் பக்குவமாய்
பள்ளியறைக்கனுப்பி வைப்போம்
வாரீர்!

துன்பத்தில் துவளும்:
மனைவி, மகள், மகன் பெற்றோர்,
சகோதரர்கள், மைத்துனர்.

91/5, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். [30088]

மரண அறிவித்தல்கள்

சரஸ்வதி திரவியராஜா

புன்னாலைக் கட்டுவனைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய மருத்துவத் தாதி திருமதி சரஸ்வதி திரவியராஜா 27-3-94 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற க. திரவியராஜாவின் (கட்டுடை) அன்பு மனைவியும், உமாசுதன் (செவிப்புலனற்றோர் கைத்தொழிற்பேட்டை, யாழ்ப்பாணம்), உமாசங்கர் (ஹரி எலெக்ட்ரிக்கல்ஸ் மட்டக்களப்பு), உமாகாந்தன், உமாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 195, திருமலை வீதி, மட்டக்களப்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
தி. உமாசுதன் (சுதன்)
(மகன்)

175, புது வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (30147)

லோறன்ஸ் மாகிறட்

சென் ஜேம்ஸ் இளவாலையைச் சேர்ந்த லோறன்ஸ் மாகிறட் காலமானார். இவர் சந்தியா லோறன்ஸின் அன்பு மனைவியும், பாக்கியநாதர் காலஞ்சென்ற அகத்தம்மா, அன்னம்மா ஆகியோரின் சகோதரியும், பெனடிக்ற், மரியநாயகம், தேவரட்ணம், ராஜேஸ்வரி, நேயல் பிரான்சிஸ், அன்னமேரிநீடா ஆகியோரின் அருமைத்தாயாரும் இருதயநாயகி ஞானசௌந்தரி, மொடஸ்ரா, கிறிஸ்ரி ஜேசவ் ஜெஜமலர், வின்சன் குணாளன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (30-3-94) பி. ப. 3 மணியளவில் பண்டத்தரிப்பு பற்றிமா ஆலய சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
லோ பெனடிக்ற்.
(மகன்)

பற்றிமா வீதி,
பண்டத்தரிப்பு. (30146)

[illegible] 30 03 1994 [illegible]

சந்திரசேகரன் விடுதலைக்கு செல்லச்சாமி முயற்சித்தார்?

கொழும்பு, மார்ச் 30

கட்டுப்பலடத் தலைமையகம் மீதான குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் குற்றம் சுமத்தப்பட்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டிருக்கும் — மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரனை விடுவிக்க அமைச்சர் செல்லச்சாமி முயன்று வருவதாகக் கொழும்புத் தமிழ் வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

மேற்படி குண்டுத்தாக்குதலின் சூத்திரதாரியான வரதனுக்கு புகலிடம் கொடுத்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் சந்திரசேகரன் மற்றும் அவரது முன்னணியின் செயலாளர் காதர், உபதலைவர் தர்மலிங்கம் ஆகியோர் 1991 ஜூலை முதல் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்பத்தில் அவர்களுக்கு எதிரான வழக்கு கண்டியில் நடைபெற்றது. ஆனால் அவர்களுக்கு கண்டியில் பாதுகாப்பு இல்லை என்று தெரிவித்து வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்துக்குமாற்றப்பட்டது.

மத்தியமாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற சந்திரசேகரன் தான் சத்தியப்பிரமாணம் செய்வதற்கு வசதியாக தம்மை பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றத்திடம் கோரினார்.

ஆனால் வெளியில் வர அவருக்கு பாதுகாப்பு இல்லை என்று தெரிவித்து பிணை மறுக்கப்பட்டது.

ஆனால் இப்பொழுது திடீரென சந்திரசேகரன் தனது சகோதரியின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காக பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

ஐ. தே. கவில் தொண்டமானுக்கு செல்வாக்கு இருந்த போது, அவரது அழுத்தத்தின் பேரில் - மலையகத்தில் அவருக்கு எதிரான சக்தியாக விளங்கும் — சந்திரசேகரன் மீது குற்றம் சுமத்தப்பட்டது; அவரை வெளியில் வர அனுமதிக்கவில்லை.

ஆனால் இப்போது அரசுக்கும் தொண்டமானுக்கும் இடையில் உறவு கசந்ததை அடுத்து — தொண்டா - செல்லச்சாமி முரண்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து —

தொண்டா முகத்தில் கரிபூச சந்திரசேகரனின் விடுதலைக்கு செல்லச்சாமி உழைத்தார்.

சந்திரசேகரன் பொலிஸாரின் 6 ஆம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டபோது செல்லச்சாமி அங்கு சென்று அவரை மூன்று தடவை சந்தித்துப் பேசினார். சந்திரசேகரனின் விடுதலை குறித்து பாதுகாப்பு அமைச்சு மட்டத்தில் அமைச்சர் செல்லச்சாமி நான்குதடவைகள் பேசினார்.

அதன் பின்னர் சந்திரசேகரன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

மார்ச் 19 ஆம் திகதி அவரின் சகோதரியின் திருமணம் நடைபெற்றது. அங்கு செல்லச்சாமியும் அவரது ஆதரவாளர்களும்சென்றிருந்தனர்.

— இவ்வாறு அந்தப் பத்திரிகை தெரிவித்தது. (உ)

நாளை

கோப்பாய் கல்விக் கோட்டத்திலுள்ள சகல அதிபர்களுக்குமான கூட்டம் ஒன்று நாளை பிற்பகல் 2 மணிக்கு அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

★ ★ ★

கெற்பேலிக்குறிச்சியில் மலேரியா நோய் பரவுவதை தடுப்பது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றுநாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும். (உ-162)

★ ★ ★

யாழ். இலக்கிய வட்டம் நடத்தும் முதறிஞர் க.சி. குலரத்தினம் அஞ்சலிக் கூட்டம் நாளை மாலை 4. 30 மணிக்கு நியகுலம் சந்தியில் உள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும்.

இலக்கிய வட்டத் தலைவர் திரு. அ. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் சொக்கன், கலாநிதி க. கனகராசா ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்துவார்கள். (உ-கக)

★ ★ ★

தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 96 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு அன்னாரின் வாழ்வுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்தும் ஆராதனை 31 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுண்டிக்குளி புனித யோவான் ஸ்நானகன் தேவாலயத்தில் நடைபெறும்.

யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தினரால் நடத்தப்படும் மேற்படி ஆராதனையில் தென்னிந்திய திருச்சபையின் யாழ் ஆயர் அதிவண கலாநிதி சு. ஜெபநேசன் அடிகளார் தந்தை செல்வாவின் வாழ்விற்கு சாட்சி பகர்ந்து அருளுரை ஆற்றுவார்.

ஆராதனை முடிந்ததும் பெரிய வியாழன் நாளுக்குரிய பரிசுத்த நற்கருணை ஆராதனை மாலை 4 45 மணிக்கு நடைபெறும். (க)

தெற்கு ·

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

கட்சியின் அமைப்பாளர் போன்ற பொறுப்புகளில் இருந்து ரணில் — கூரே ஆதரவாளர்களை நீக்க ஜனாதிபதி தரப்பில் முயற்சி எடுக்கப்பட்டு வரும் அதேவேளை—

ரணில் — கூரே கோஷ்டியினர் தமக்கு ஆதரவானவர்களுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் கூறப்பட்டது.

அனுரா தற்போது ரணில் — கூரே கூட்டு பக்கம் சாய்ந்திருக்க, அண்மையில் மீண்டும் கட்சிக்குள் பிரவேசித்த காமினி திஸநாயக்கா ஜனாதிபதி விஜேதுங்காவை ஆதரித்து வருகிறாராம். (உ)

முல்லைத்தீவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்டன் கட்டப்பொம்மன், 2 ஆம் லெப்டினன்ட் இளந்திரையன், 2 ஆம் லெப்டினன்ட் சூரன் ஆகியோரின் வித்துடல்கள் இன்று காலை 10மணிக்கு அவர்களது இல்லங்களில் இருந்து பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் மாகியப்பிட்டி செட்டி சனசமூக நிலையத்துக்கு எடுத்து செல்லப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்

அஞ்சலியையடுத்து வீரவணக்கக் கூட்டம் நடைபெற்று, அங்கிருந்து சகல அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்துக்கு வித்துடல்கள் எடுத்துச் செல்லப்பட்டு புதைகுழியில் விதைக்கப்படும். [illegible]

எதிரணி--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் மா அதிபர் தூதுக் குழுவை கேட்டார்.

எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாட்டின் மீது தாம் உடனடியாக நடவடிக்கை எடுக்கப் போவதாக பொலிஸ் மா அதிபர் தூதுக் குழுவிடம் தெரிவித்தார்.

இதேசமயம்—

இத்தாக்குதல்கள் குறித்து இரண்டு பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக சில தினங்களில் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குகளைத் தாக்கல் செய்யப் போவதாகவும் தூதுக்குழு பொலிஸ் மா அதிபரிடம் தெரிவித்தது.

கம்புறுபிட்டி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் ஹெட்டியாராச்சி மற்றும் மொரவக்க பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பண்டார ஆகியோர் மீதே இவ் வழக்குகள் தாக்கல் செய்யப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் அதிகாரிகளின் தாக்குதல்களுக்கு ஆளாகிக் காயம் அடைந்த பொதுமக்கள் பலர் காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று திரு. டியூ குணசேகரா தெரிவித்தார் (உ-எ6)

ரஷ்ய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தை நடைபெற்றதாக பாதுகாப்புத்துறையின் பிரபலமான அதிகாரி ஒருவர் அரசுக்கு உறுதிப்படுத்தியிருக்கிறார்: ஆனால் அந்த இரு நாடுகளில் ஒன்றான தென்னாபிரிக்காவுடன் ஸ்ரீலங்காவுக்கு ராஜீக உறவு- இல்லை என்பது குறிப்பிடத்தக்கது என அப்பத்திரிகைச் செய்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டிருக்கும் ஆயுதங்களில் யுத்த டாங்கிகள் குண்டுதுளைக்காத உடைகள், துப்பாக்கிகள் உட்பட பல்வேறு யுத்த உபகரணங்கள் அடங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆயுதக் கொள்வனவு பேச்சு வார்த்தை சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சின் அதிசிரேஷ்ட அதிகாரி ஒருவரும் இராணுவ, கடற்படை, விமானப்படை என்பவற்றைச் சேர்ந்த மூன்று அதிகாரிகளும் ரஷ்யாவுக்கும் தென் ஆபிரிக்காவுக்கும் விரைவில் செல்லவுள்ளனர். (உ)

புலிகளுடன்…

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களும் வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டு பேசியதாகக் கூறப்படும் செய்தி வெளியானதை அடுத்தே ஜெயலலிதா மேற்படி குற்றச்சாட்டை வெளியிட்டிருக்கிறார். (உ-எ)

பிரிட்டனில்......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசு பேச்சாளர் மறுத்தார்.

உடன்பாடு செய்து கொள்ளப்பட்டதாக பத்திரிகையில் வெளியான செய்தி, செய்தியாளர்களின் கற்பனையே என்றும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தச் செய்தி முற்றிலும் தவறானது என்பதோடு பிரதமர் மற்றும் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி அந்த செய்தியாளர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதையும் அது காட்டுகிறது என்றும் அப்பேச்சாளர் சொன்னார்.

இந்திரா காங்கிரஸ் உயர் நிலை வட்டாரங்களில்—

விடுதலைப் புலிகள் பற்றியோ, அவர்கள் செயற்படும் விதம் பற்றியோ விபரம் தெரிந்திராத சந்தேகப்படாத —ஒரு செய்தியாளர் ஒருவரிடம் அ.தி.மு.கவே இச்செய்தியைக் கொடுத்தது என்ற கருத்து நிலவுகின்றது.

இதற்கிடையில்—

நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் பேசிய அ.தி.மு.க உறுப்பினரான பி.ஜி நாராயணன்—

அண்மையில் வெளிநாடொன்றில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளை 'றோ' உளவுத்துறை அதிகாரிகள் சந்தித்ததாக வெளியான செய்தி தொடர்பாக அரசிடம் சில விளக்கங்களைக் கோரினார்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை விலக்கிக் கொள்ள வேண்டாம் என்று கோரிய அவர், தமிழக அரசு புலிகள் இயக்கத்துக்கு எதிராகக் கடும் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் சொன்னார்.

இதே வேளை—

'றோ' அமைப்பு விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்டதாகக் கூறப்படும் உடன்பாடு பற்றி பிரதமர் நரசிம்மராவ் விளக்கம் தர வேண்டும் என்று மாநில அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் கோரியுள்ளார்.

ஐ. தே க. பிரமுகர்களின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''நான் இறுதியாக உங்களிடம் கேட்பது என்னவென்றால், 24 ஆம் திகதி காலை நேரத்துடன் சென்று உங்கள் வாக்குகளை பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு அளியுங்கள்'' — என்று கூறி முடித்தார்.

மேடையில் இருந்தவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்தனர்.

அதே தினத்தில் காலியில் கறாபிட்டிய என்ற இடத்தில் நடைபெற்ற ஐ. தே. க கூட்டத்தில் பிரதம பேச்சாளராக பங்கு கொண்ட சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத், தமது கட்சியின் சார்பில் முதலமைச்சர் பதவிக்கு போட்டியிட்டவர் பெயரைக் கூறுவதில் குழம்பி விட்டார்.

ஐ. தே. க. சார்பில் முன்னாள் அமைச்சர் எம். எஸ். அமரசிறியும், எதிரணி சார்பில் அமரசிறி தொடங்கொடவும் முதலமைச்சர் பதவிக்கு போட்டியிட்டனர். இருவரும் முன்னர் தென் மாகாண முதலமைச்சர் பதவியில் இருந்தவர்கள்.

அமைச்சர் ரேணுகா ஹேரத் தமது உரையில் ''மீண்டும் [illegible] மாகாண முதலமைச்சராக பெருமதியிக்க உங்கள் வாக்குகளை அளியுங்கள்'' — என்று [illegible] கொண்டார். (உ)

யாழ். மாவட்டத்தில்
பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏற்பாடு

தமிழ் மாவட்டங்களில் உள்ள தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கடந்த 25 ஆம் திகதிய வர்த்தமானியில் இது தொடர்பான விபரங்கள் வெளியாகியுள்ளன என்றும்—

அந்த வர்த்தமானி அறிவித்தல் விரைவில் யாழ் செயலகத்துக்கு அனுப்பப்படும் என்றும்— அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள விளையாட்டு அதிகாரிகள் பதவி வெற்றிடங்களை நிரப்ப வடக்கு—கிழக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த வெற்றிடங்களை நிரப்ப விரைவில் விண்ணப்பங்கள் கோரப்படவிருப்பதாக அறியவருகிறது.

இதேவேளை-யாழ். மாவட்டத்தில் அபிவிருத்தி உத்தியோகஸ்தர் (டி. ஓ) வெற்றிடங்களும் விரைவில் நிரப்பப் படவிருக்கின்றன. (உ-3)

மாஹோ புறப்பட்டது

மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றை இறக்கிவிட்டு ''மாஹோ'' கப்பல் நேற்று பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச் சென்றது. இக் கப்பலில் வெளியூர்களுக்கான ஒரு தொகுதி தபால் பொதிகளும் எடுத்துச் செல்லப்படுகின்றன. (அ-173)

நினைவு தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

உயிர் காப்புச் சேவையில் ஈடுபட்ட போது, ஹெலிகொப்டர் தாக்கியதில் உயிர் நீத்த, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளை உபதலைவர் க. புவனேந்திரன் நினைவாக இன்று திருநெல்வேலி இந்து மன்றச் சிறார்களுக்கு மதிய உணவு வழங்கப்படவுள்ளது. (அ)

நோயாளர் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை வந்து நோயாளர்களை ஏற்றிக்கொண்டு அன்றே புறப்படும்.

இதேவேளை நாளை கொழும்பு செல்லவிருக்கும் நோயாளர்களை—

இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு மற்றும் தண்ணீருடன் நாளை காலை எட்டு மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ-3)

'கோமரி' கப்பல் 5 ஆம் திகதி வரும்

யாழ்ப்பாணம், மார்ச் 30

கொழும்பில் தற்சமயம் பொருட்கள் ஏற்றிக் கொண்டிருக்கும் 'கோமாரி' கப்பல் எதிர்வரும் 5 ஆம் திகதி பருத்தித் துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக் கப்பலில் 2 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, 950 மெற்றிக் தொன் சீனி, 100 மெற்றிக் தொன் மைசூர் பருப்பு உட்பட மற்றும் உணவுப் பொருட்களும் எடுத்து வரப்படுகின்றன. (உ-3)

விஞ்ஞானபீட மாணவர்களுக்கான அவசரப் பொதுக் கூட்டம்

இன்று (30-3-94) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முக்கியமான விடயம் சம்பந்தமாகக் கலந்தாலோசிக்க இருப்பதால் சகல விஞ்ஞானபீட மாணவர்களும் தவறாது சமூகம் தரவும்.

செயலாளர்,
விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(சி/7633)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
ஒன்று கூடல் அழைப்பு

பல்கலைக்கழகங்களில் கற்கும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வு 6 4 94 புதன்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

தற்பொழுது பல்கலைக்கழகங்களில் கற்கும் அனைத்து மாணவர்களையும் பங்குபற்றும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
சி-7632

வாழ்த்துகின்றோம்

சந்திரசேகரம் உதயகுமார்
(பொறியியலாளர்)

இவர் கெற்பேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது ஆரம்பக்கல்வியை விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்திலும் உயர் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பயின்று பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவனாகச் சேர்ந்தார். 22 - 12 - 1993 இல் பொறியியல் பட்டம் பெற்று 13 - 02 - 1994 இல் புலமைப் பரிசில் பெற்றுத் தனது மேற்படிப்புக்காக அமெரிக்கா சென்றுள்ளார். இவரைக் கெற்பேலிக் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

தலைவர்

கெற்பேலி கிராம அபிவிருத்திச் சங்கம்,
மிருசுவில். (30144)

மரண அறிவித்தல்

முருகேசு ஜெயவீரசிங்கம்

வரணியைச் சேர்ந்த முருகேசு ஜெயவீரசிங்கம் (ஜே பி. - இளைப்பாறிய முகாமையாளர், நெடுங்கேணி ப. நோ. கூ. சங்கம்) நேற்றுக் காலமானார்.

அன்னார் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், இருபாலினி, ததீசன் (லண்டன்) வாகீசன் (கனடா), கேதீசன் (மாணவன்) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

தகவல்,
மு. சிதம்பரநாதன்
(சகோதரன்)

வரணி வடக்கு,
வரணி. (30148)